Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 20.10.2025/Script.

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 20.10.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

தீபாவளித் திருநாள் இன்று நாடு முழுவதும் பாரம்பரிய உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படுகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கோவாவில் தீபாவளி பண்டிகையை இந்திய கடற்படை வீரர்களுடன் கொண்டாடினார்.

பீகார் சட்டமன்ற தொகுதிகளுக்கான 2-ஆம் கட்ட தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி தினமாகும்.

ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் நாட்டின் ரியல் எஸ்டேட் துறையை வலுப்படுத்தி உள்ளதாக கூறப்படுகிறது.

*தீபாவளி-வாழ்த்து*

தீபங்களின் பண்டிகையான தீபாவளித் திருநாள் இன்று நாடு முழுவதும் பாரம்பரிய உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படுகிறது. நன்மை தீமையை வென்றதை குறிக்கும் இந்தப்

பண்டிகை வீடுகள், கோவில்கள், மற்றும் பிற பொது இடங்களில் விளக்குகள் ஏற்றி கொண்டாடப்படுகிறது. இந்த நாளில் செல்வத்தின் தெய்வமான லட்சுமியையும், மக்கள் வணங்குகின்றனர். இந்த தீபாவளி பண்டிகையை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன், இன்று புதுடெல்லியில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்முவை அவரது மாளிகையில் சந்தித்து தீபாவளி வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டார். மேலும் முன்னாள் குடியரசு தலைவர் திரு ராம்நாத் கோவிந்த், புதுடெல்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா ஆகியோர் திருமதி முர்முவை சந்தித்து தீபாவளி வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

மோடி-கோவா

பிரதமர் திரு நரேந்திர மோடி கோவா ஐஎன்எஸ் விக்ராந்த் போர்க்கப்பலில் இந்திய கடற்படை வீரர்களுடன் இன்று தீபாவளியை கொண்டாடினார். இந்தியாவின் முதல் உள்நாட்டு விமானம் தாங்கி கப்பலான ஐஎன்எஸ் விக்ராந்த் இந்தியாவின் ஆயுதப் படைகளின் திறனை பிரதிபலிக்கிறது என்றார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது சில நாட்களுக்குள் பாகிஸ்தானை மண்டியிட வைத்ததாகவும் அவர் கூறினார்.

மே-7 ஆம் தேதி அன்று பகல்ஹாம் தாக்குதலுக்கு பதிலளிக்கும் விதமாக இந்தியப் படைகள் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையை தொடக்கினர். மேலும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்ப காஷ்மீர் மற்றும் பாகிஸ்தான் முழுவதும் பல பயங்கரவாத உள்கட்டமைப்பு தளங்களை குறி வைத்து ஒருங்கிணைந்த தாக்குதல்களை நடத்தின. கடற்படை வீரர்களுடன் இந்த புனிதமான பண்டிகையைக் கொண்டாடுவது தனது அதிர்ஷ்டம் என்றும் பிரதமர் கூறினார்.

*மோடி-கோவா*

ஒருபுறம் கடலும், மறுபுறம் இந்திய தாயின் துணிச்சல் மிக்க வீரர்களின் பலமும் தமக்கு உள்ளதாக தெரிவித்த அவர் கடலில் தெரியும் சூரிய கதிர்களின் பிரகாசம் துணிச்சல் மிக்க வீரர்களால் ஏற்றப்படும் தீபங்களைப் போன்றது என்று அவர் கூறினார். ஒவ்வொரு இடர்பாட்டையும் சீர்திருத்தமாகவும், ஒவ்வொரு சீர்திருத்தத்தையும் மீள்தன்மை உடையதாகவும், ஒவ்வொரு மீள்தன்மையையும் புரட்சியாகவும் மத்திய அரசு மாற்றி உள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

*தீபாவளி தலைவர்கள் வாழ்த்து*

தீபாவளி திருநாள் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது. சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை புத்தாடை அணிந்து உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் இனிப்புகளை

பரிமாறியும் பட்டாசுகளை வெடித்தும் கொண்டாடி வருகின்றனர். இத்திருநாளை முன்னிட்டு பல்வேறு தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்.

இதுகுறித்த ஒரு செய்தி தொகுப்பு............

(வாய்ஸ்)

*தீபாவளி தலைவர்கள் வாழ்த்து*

(வாய்ஸ்)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வெளியிட்டுள்ள செய்தியில் அனைவரது வாழ்விலும் செழுமை நிலவவும் மக்கள் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கவும், கடவுள் ராமரை பிராத்திப்பதாக கூறி உள்ளார். காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் அனைவரின் வாழ்விலும் மகிழ்ச்சியும், அமைதியும் நிரம்பட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆஸ்திரேலிய பிரதமர் திரு ஆன்டனி அல்பனீஸ் தீபாவளி வாழ்த்து தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், இந்த சிறப்பு மிக்க பண்டிகை அனைவரது வாழ்விலும் ஒளிமயமான எதிர்காலத்திற்கான நம்பிக்கையை அளிக்கட்டும் என்று கூறி உள்ளார். ஆஸ்திரேலியா மற்றும் உலக நாடுகளில் வாழும்

இந்தியர்களுக்கு ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திரு பென்னியும் வாழ்த்து தெரிவித்துள்ளார். இதற்கிடையே, புதுடெல்லியில் உள்ள ஆஸ்திரேலிய தூதரகத்தில் தீபாவளி உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. இதில் அந்நாட்டு அமைச்சர் Anny Aly கலந்து கொண்டு சிறப்பித்தார்.

*ராஜ்நாத் சிங்*

மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் காவலர் வீர வணக்க நாளை முன்னிட்டு புதுடெல்லியில் உள்ள தேசிய காவல் நினைவிடத்தில் தியாகிகளுக்கு நாளை அஞ்சலி செலுத்துகிறார். மத்திய ஆயுத காவல் படைகள் மற்றும் புதுடெல்லி காவல் துறையின் கூட்டு அணி வகுப்பும் நடைபெறும். இந்நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற காவல்துறை தலைமை இயக்குநர், காவல்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர். இதன் ஒரு பகுதியாக வரும் 22-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை தேசிய காவல் நினைவிடத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

*பீகார் தேர்தல்*

பீகார் சட்டப்பேரவையின் 2-ஆம் கட்ட தேர்தலில் போட்டியிடுவதற்கு இதுவரை ஆயிரத்து 66 வேட்பாளர்கள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. 20

மாவட்டங்களில் உள்ள 122 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 11-ஆம் தேதி 2-ஆம் கட்ட வாக்குபதிவு நடைபெறுகிறது. 2-ஆம் கட்ட தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி தினமாகும். இதற்கிடையே முதற்கட்ட தேர்தலில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்தவர்கள் தங்கள் மனுவை திரும்ப பெறுவதற்கு இன்று கடைசி தினமாகும். 18 மாவட்டங்களில் இடம் பெற்றுள்ள 121 தொகுதிகளில் அடுத்த மாதம் 6- ஆம் தேதி முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறுகிறது. முதல் கட்ட தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களில் ஆயிரத்து 375 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக பீகார் தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார். இந்நிலையில் தேர்தலின் கருப்பு பணம் புழக்கம் இலவச பொருட்கள் வழங்குவது ஆகியவற்றை தடுப்பதற்கான கண்காணிக்கும்

*பீகார் தேர்தல்*

பணியில் பொருளாதார உளவுத் துறை பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். இதுவரை மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 17 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப் பொருட்களும் 23 கோடி ரூபாய் மதிப்பிலான மதுபானங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. வாக்காளர்களுக்காக வழங்கப்பட இருந்த 14 கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்களும், 4 கோடி ரூபாய் ரொக்கமும் பறிமுதல் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

*ஜிஎஸ்டி-ரியல் எஸ்டேட்*

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த மாதம் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சேமிப்பு திருவிழாவால் நாடு முழுவதும், அனைத்து பிரிவு மக்களும் பயன் பெற்று வருகின்றனர். அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால், ரியல் எஸ்டேட் பொருளாதாரம் எப்படியெல்லாம் ஊக்கம் பெறும் என்பது குறித்து ஒரு செய்தித் தொகுப்பு........

(வாய்ஸ்)

*ஜிஎஸ்டி- ரியல் எஸ்டேட்*

(வாய்ஸ்)

சரக்கு மற்றும் சேவை வரியில் மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் நாட்டின் ரியல் எஸ்டேட் துறையை வலுப்படுத்தி உள்ளதாக கூறப்படுகிறது. வரிகள் குறைக்கப்பட்டுள்ளதன் மூலம் இத்துறைக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைந்துள்ளது. சிமெண்ட் மீதான வரி 28 சதவிகிதத்தில் இருந்து 18 சதவிகிதமாக குறைக்கப்பட்டதன் மூலம் வீடுகளின் கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களுக்கான செலவு குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மார்பல் மற்றும் கிரானைட் கற்கள் மீதான வரி 12 சதவிகிதத்தில் இருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டுள்ளது. சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தங்கள் கட்டிடங்கள் கட்டுவோர் மற்றும்

ஒப்பந்ததாரர்களுக்கு பெரும் பயன் அளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

*அஸ்வினி வைஷ்ணவ்*

மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் உள்ள ரயில்வே வாரியத்தில் அமைந்துள்ள கட்டுப்பாட்டு அறையை பார்வையிட்டார். இந்த பயணத்தின் போது பண்டிகை காலத்தில் பயணிகள் நடமாட்டத்தையும் அவர் ஆய்வு செய்தார். தீபாவளியை முன்னிட்டு 24 மணி நேரமும் பணியாற்றும் ஊழியர்களுக்கு தனது வாழ்த்துக்களை அவர் தெரிவித்தார். பண்டிகை காலங்களில் பயணிகளின் தேவை அதிகரிப்பை கையாள இந்திய ரயில்வே விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளது. தீபாவளி மற்றும் சத் பூஜா பண்டிகைகளின் போது சீரான பயணத்தை உறுதி செய்வதற்காக 12-ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

*சபாநாயகர்*

புதுச்சேரி கிருஷ்ணாநகரில் அமைந்துள்ள ஜாலி ஹோம்ஸ் நரிக் குறவர் இன குழந்தைகள் பாதுகாப்பு மையத்தில் சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம் தீபாவளி பண்டிகையை கொண்டாடினார். அங்குள்ள குழந்தைகளுக்கு புத்தாடை, இனிப்பு, பட்டாசுகள் வழங்கினார்.

(வாய்ஸ்சபாநாயகர்)

வானிலை

கேரளா தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவில் ஒரு சில இடங்களில் இன்று கனமழை முதல் மிக கனமழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 2 நாட்களுக்கு புதுச்சேரி, மாகே, ஆந்திரா, லட்சத் தீவு மற்றும் காரைக்கால் ஆகிய இடங்களிலும் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு

ஆஸ்திரியாவில் நடைபெறும் வியன்னா ஓப்பன் டென்னீஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் யூகிபாம்ரி, ஸ்வீடனின் ஆன்ட்ரோ இணை- ஆஸ்திரியா இணையை நாளை எதிர்கொள்கிறது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

தீபாவளித் திருநாள் இன்று நாடு முழுவதும் பாரம்பரிய உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடப்படுகிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று கோவாவில் தீபாவளி பண்டிகையை இந்திய கடற்படை வீரர்களுடன் கொண்டாடினார்.

பீகார் சட்டமன்ற தொகுதிகளுக்கான 2-ஆம் கட்ட தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய இன்று கடைசி தினமாகும்.

ஜிஎஸ்டி சீர்திருத்தங்கள் நாட்டின் ரியல் எஸ்டேட் துறையை வலுப்படுத்தி உள்ளதாக கூறப்படுகிறது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/ 20.10.2025/Script.

-----------------------------------